திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# வறட்சி பாதிப்பை சரியாகக் கணக்கிட்டு நிவாரணம் வழங்க பரிந்துரைக்க வேண்டும்

வறட்சி பாதிப்பைச் சரியாகக் கணக்கிட்டு நிவாரணம் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைக்க உரிய மானியம் அளிக்கவும், பட்டா மற்றும் சிட்டா ஆகியவற்றை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர்.

ஆவின் நிறுவனம் உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டிய போனஸ் தொகை இன்னும் தாமதமாகி வருகிறது. அத் தொகை விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மதுரை மாவட்டத்தில் இரு கிராமங்களில் மட்டும், வறட்சி பாதிப்பை உயர்நிலைக் குழு ஆய்வு செய்து சென்றுள்ளது.

மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் வறட்சியின் பாதிப்பைச் சரியாகக் கணக்கிட்டு அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தினர்.

விவசாயிகளின் கோரிக்கைகளைக் கேட்டறிந்த ஆட்சியர் அன்சுல்மிஸ்ரா, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில் அளிக்கவும் அறிவுறுத்தினார்.

ஆவின் உறுப்பினர்களுக்கான போனஸ் குறித்த கோரிக்கைக்குப் பதில் அளித்த ஆவின் அதிகாரிகள், 2010-11 ஆம் ஆண்டுக்கான போனஸ் தொகை வழங்கப்பட்டு விட்டது. 2011-12 ஆம் ஆண்டு ஆவின் நிறுவனம் நஷ்டத்தில் இயங்கியதால் போனஸ் வழங்கபடவில்லை. நடப்பு ஆண்டிற்கான போனஸ் தொகை ஏப்ரல் இறுதியில் அறிவிக்கப்படும் என்று தெரிவித்தனர்.

மாவட்ட வருவாய் அலுவலர் (பொறுப்பு) ஜான் லூயிஸ், உதவி காவல் கண்காணிப்பாளர் (பயிற்சி) பி.எஸ்.சி. கல்யாண், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் பழனிவேல், வேளாண் இணை இயக்குநர் ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெய்சிங் ஞானதுரை மற்றும் அனைத்துத துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## ஏப்ரல் மாதம் உழவர் பெருவிழா

வேளாண் துறையில் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விவசாயிகள் அறிந்து கொள்ளும் விதமாக வரும் ஏப்ரல் மாதம் உழவர் பெருவிழா தொடங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளதாக வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன் தெரிவித்தார்.

பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை ஒன்றியங்களுக்கு உள்பட்ட கிராமங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் இலவச மிக்சி, கிரைண்டர், மின்விசிறிகளை அமைச்சர் வழங்கினார். அவர் பேசியது:

தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து டெல்டா பகுதி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு நிவாரண நிதியாக ரூ. 15 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தின் மற்ற பகுதியில் பயிர்களின் பாதிப்பை அறிந்துகொள்ள குழு ஒன்றை தமிழக முதல்வர் அமைத்துள்ளார். இக்குழுவினர் தற்போது தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இக்குழுவின் பரிந்துரைப்படி மற்ற பகுதிகளுக்கும் நிவாரண நிதி வழங்கப்படும்.

வேளாண் துறையில் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றி விவசாயிகள் அறிந்துகொள்ளும் விதமாக வரும் ஏப்ரல் மாதம் தமிழகம் முழுவதும் உழவர் பெருவிழா நடத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார் என்றார்.

இந்த விழாவில் வால்பாறை சட்டப்பேரவை உறுப்பினர் எம்.ஆறுமுகம், சிறப்புத் திட்டங்கள் துணை ஆட்சியர் குணசேகர், ஆனைமலை ஒன்றியக்குழுத் தலைவர் கஸ்தூரி வாசு, பெரியபோது ஊராட்சி மன்றத் தலைவர் பத்மநாபன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 39.48 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 39.48 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 438 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.37 டி.எம்.சி.

## பசுந்தேயிலை கொள்முதல் மையம் திறப்பு

கூடலூரை அடுத்த தேவாலா ஹட்டியில் ரூ.10 லட்சம் செலவில் கட்டப்பட்ட பசுந்தேயிலை கொள்முதல் மையம் திறக்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகள் சங்கம் மற்றும் இந்திய தேயிலை வாரியத்தின் மானியத்துடன் அமைக்கப்பட்டுள்ள பசுந்தேயிலை கொள்முதல் மையத்தை தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் ஆர்.அம்பலவாணன் திறந்து வைத்தார்.

விவசாயிகள் சங்கத் தலைவர் ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். செயலாளர் ராமர், பொருளாளர் ராமராஜ், நிர்வாகிகள் முனியாண்டி, கந்தையா, சேதுபதி உள்பட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக தென்னிந்திய தேயிலை வாரிய உறுப்பினர் வழக்குரைஞர் கோஷி பேபி, கூடலூர் சாலிஸ்பரி கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை இயக்குநர் சேகர், பந்தலூர் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை இயக்குநர் நாகராஜ், உபாசி விஞ்ஞானி ராமமூர்த்தி, நெல்லியாளம் நகர்மன்றத் தலைவர் அமிர்தலிங்கம் உள்பட பலர் கலந்துகொண்டனர். தரமான தேயிலை உற்பத்தி செய்வதன் அவசியம் குறித்து விழாவில் விளக்கப்பட்டது.

## பிக்கட்டி தேயிலை ஆலைக்கு புதிய இயந்திரம்

பிக்கட்டி கூட்டுறவு தேயிலை ஆலையின் திறனை மேம்படுத்த ரூ.31 லட்சம் மதிப்பில் புதிய டிரையர் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது .

பிக்கட்டி கூட்டுறவு தேயிலை ஆலையில் பிக்கட்டி, ஒசஹட்டி, முள்ளிகூர், பார தியார் புதூர், சிவசக்தி நகர், கெரப்பாடு, குந்தா கோத்தகிரி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு தேயிலை விவசாயிகள் அங்கத்தினர்களாக சேர்ந்து பசுந்தேயிலை விநியோகம் செய்து வருகின்றனர்.

இந்த ஆலையில் உள்ள ட்ரையர் இயந்திரம் பழமையானது என்பதால், அடிக்கடி பழுதாவதுடன் போதிய திறன் இல்லாமல் இருந்தது. இதனால் தேயிலை உற்பத்தி செய்வதில் சிக்கல் ஏற்பட்டு வந்தது. மேலும், பசுந்தேயிலை வரத்து அதிகரிக்கும் காலங்களில் இயந்திரங்களின் திறன் குறைவு காரணமாக விவசாயிகளிடம் முழு அளவில் பசுந்தேயிலை கொள்முதல் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.

ஆலை நிர்வாகம் முழு அளவில் பசுந்தேயிலை கொள்முதல் செய்ய முடியாத நிலையில் செடியிலேயே பசுந்தேயிலை முற்றி வீணாவதால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில் நீலகிரி மாவட்ட கூட்டுறவு தேயிலை ஆலைகளின் மேம்பாட்டுக்காக தமிழக அரசு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. இந்த நிதியில் பிக்கட்டி கூட்டுறவு தேயிலை ஆலையில் ரூ.31 லட்சம் மதிப்பில் புதிய டிரையர் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இதனால் தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மார்ச் 22-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில்

வெள்ளிக்கிழமை (மார்ச் 22) காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில், விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று நீர்ப்பாசனம்,

வேளாண்மை, இடுபொருள்கள், வேளாண் தொடர்புடைய கடனுதவிகள் குறித்து நேரிலோ அல்லது மனுக்கள் மூலமாகவே குறைகள் மற்றும் கோரிக்கைகளை

தெரிவிக்கலாம்.

## பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்க மானியம்

புதுக்கோட்டை மாவட்ட காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்க மானியம்

அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால் காவிரி டெல்டா மாவட்ட

விவசாயிகளுக்கு வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் பண்ணைக் குட்டைகள் அமைக்க ரூ. 181 கோடியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

இதன் மூலம் நீர்வற்றிய காலங்களில் பண்ணைக் குட்டைகளைப் பயன்படுத்தி விவசாயிகளின் பயிர்களைக் காக்கவும், இறுதிக் கட்ட நீர்த் தேவையைப் நிறைவு செய்யவும்,

அவற்றில் மீன் வளர்த்து விவசாயிகள் கூடுதல் வருவாயை ஈட்டவும் வாய்ப்புள்ளது.

விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் பண்ணைக் குட்டைகளில் மீன் வளத்துறை மூலம் மீன் வளர்க்க ஓராண்டுக்குத் தேவையான இடுபொருள் (மீன் குஞ்சு, உணவு

மற்றும் உரம்) மானியமாக தமிழக அரசால் ரூ. 12.85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு பண்ணைக் குட்டைக்கு 50 சத மானியத் தொகை வழங்கப்படும். அதில் மீன் குஞ்சு வளர்ப்புக்கு ரூ. 30 ஆயிரம், மீன் வளர்ப்புக்கு ரூ. 17,500-ம் கிடைக்கும்.

எனவே, இத் திட்டத்தின் மூலம் பயனடைய விரும்பும், புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை மூலம் தோ0வு செய்யப்பட்ட பண்ணைக் குட்டை விவசாயிகள்

தங்களது விவசாய நில விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சியருக்கு நேரிலோ, தபால் மூலவோ வரும் 31-ம் தேதிக்குள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

## வடகாட்டில் திருந்திய நெல் சாகுபடி பயிற்சி

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள வடகாட்டில் விவசாயிகள், விவசாயத்

தொழிலாளர்களுக்கான திருந்திய நெல் சாகுபடி பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் அம்புலியாறு உபவடி நிலப் பகுதியைச் சேர்ந்த வடகாட்டில் நடைபெற்ற பயிற்சியை, மாவட்ட வேளாண் துணை இயக்குநர் (மாநிலத்

திட்டங்கள்) கே. பாலன் தொடக்கி வைத்தார்.

பயிற்சியில் குறைந்த பாசன நீரைக் கொண்டு குறைந்த செலவில் 50 சதம் கூடுதலாக மகசூல் தரக்கூடிய திருந்திய நெல் சாகுபடி முறைகள் குறித்து விளக்கப்பட்டது.

திருவரங்குளம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ராம. சிவக்குமார் முன்னிலை வகித்தார்.

ஏற்பாடுகளை அட்மா வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மகேந்திரன், உதவி வேளாண் அலுவலர்கள் செ. பிரதீப்செந்தில், ஞா. கவிதா ஆகியோர் செய்தனர்.

வேளாண் அலுவலர்கள் பா. ரமேஷ், சு. அன்பரசன், விதை உதவி அலுவலர் பெ. முருகன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

## 1,330 டன் யூரியா சரக்கு ரயில் மூலம் தஞ்சை வந்தது

கோடை நெல் சாகுபடிக்காக 1,330 டன் யூரியா உர மூட்டைகள் சரக்கு ரயில் மூலம்

தஞ்சாவூருக்கு செவ்வாய்க்கிழமை வந்தன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மும்முனை மின்சாரம் ஓரளவுக்குக் கிடைப்பதால் பம்ப்செட் வசதியுள்ள விவசாயிகள் கோடை நெல் சாகுபடி மேற்கொள்கின்றனர். மாவட்டத்தில்

இதுவரை ஏறத்தாழ 8,000 ஏக்கரில் கோடைப் பருவ நெல் பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மும்முனை மின்சாரம் கிடைக்காததால் சுமார் 4,000 ஏக்கரில் மட்டுமே மேற்கொள்ளப்பட்ட கோடை நெல் சாகுபடி பரப்பளவு நிகழாண்டு அதிகரித்துள்ளது.

நிகழாண்டு ஏறத்தாழ 10,000 ஏக்கரில் கோடை நெல் சாகுபடி மேற்கொள்ள வாய்ப்புள்ளது என வேளாண் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பயிர்களுக்கு மேலுரம் இடுவதற்காக ஓமன் நாட்டிலிருந்து கிரிப்கோ யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து

தஞ்சாவூர் மாவட்டத்துக்காக 1,330 டன்கள் யூரியா மூட்டைகள் சரக்கு ரயில் மூலம் தஞ்சாவூருக்கு செவ்வாய்க்கிழமை வந்தன. இந்த மூட்டைகள் தஞ்சாவூர்,

பட்டுக்கோட்டை, கும்பகோணம் ஆகிய பகுதிகளில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையத்தின் மண்டல அலுவலகக் கிடங்களுக்கு மண்டல அலுவலர்கள் எஸ்.

மணிமன்னன், ஜெ. ஜயக்குமார் மேற்பார்வையில் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. அங்கிருந்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அனுப்பி

வைக்கப்படவுள்ளன.

ஏற்கெனவே, அடியுரமான டி.ஏ.பி., கூட்டு உரம், பொட்டாஷ் ஆகியவை போதுமான அளவுக்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக அலுவலர்கள் தெரிவித்தனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 28.75 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 28.75 அடியாக இருந்தது.அணைக்கு வினாடிக்கு 129

கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 400 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர்

திறக்கப்படவில்லை.

## மார்ச் 28-ல் நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மார்ச் 28-ம் தேதி காலை 11 மணிக்கு நாகை மாவட்ட ஆட்சியரகத்தில்

நடைபெறும் என நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்துள்ளார்.

முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று தங்கள் கருத்துகளைத் தெரிவிக்குமாறு ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் கேட்டுக்

கொண்டுள்ளார்.

## இயற்கை உரங்களை பயன்படுத்தி மண்ணை வளமாக மாற்றுங்கள்

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகே உள்ள பூலாம்பாடியில் இந்திய உரக் கூட்டமைப்பு மற்றும் ஹேன்ஸ்

ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில் மண் வள மேம்பாட்டு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு தலைமை வகித்த, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெ. கதிரவன் பேசியது:

விவசாயிகள் ரசாயன உரங்களை மட்டுமே பயன்படுத்தி விவசாயம் செய்யாமல், இயற்கை உரங்களையும் அதிகளவில் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தும்

போது மண் வளமானதாக இருக்கும். மேலும், பயிரானது தனக்கு தேவையான சத்துக்களை மண்ணிலிருந்து எடுத்துக் கொள்வதற்கு இந்த இயற்கை உரங்கள் பெரிதும்

துணை புரிகின்றன என்றார்.

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மண் அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் இரா. பிரிஸ்கா பிளேவியா பேசியது:

பயிரின் வளர்ச்சிக்கு 16 வகையான சத்துக்களில் அதிகளவில் தேவைப்படுவது தழை, மணி மற்றும் சாம்பல், பேரூட்டச் சத்துக்களாகும். குறைந்த அளவில் தேவைப்படும்

துத்தநாகம், இரும்பு, போரான் உள்ளிட்ட 13 வகையான சத்துக்கள் நுண்ணூட்டச் சத்துக்களாகும். இவற்றை மண் பரிசோதனை பரிந்துரை அடிப்படையில் பயிருக்கு இட்டால்,

கூடுதல் மகசூல் பெறலாம் என்றார்.

நிகழ்ச்சியில், பூலாம்பாடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளை மேலாளர் கந்தசாமி, முன்னாள் பேரூராட்சித் தலைவர் வேணுகோபால், கிரிப்கோ திருச்சி மாவட்ட கிளை

மேலாளர் ஜெகன்நாதன் உள்பட விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் இரா.வசந்தகுமார் நன்றி கூறினார்.

தினமலர்

## "பிளாட்டுகளாக' மாறும் தோப்புகள் அழிந்து வரும் தென்னை விவசாயம்

கொட்டாம்பட்டி:கொட்டாம்பட்டியில், வறட்சி, மின் தட்டுப்பாடு, உற்பத்திற்கு உரிய விலை கிடைக்காதது போன்ற காரணங்களால், தென்னந்தோப்புகள் அழிக்கப்பட்டு "பிளாட்டு'களாக மாறி வருகின்றன. இதனால், தென்னை விவசாயம் மெல்ல மெல்ல அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 27 ஊராட்சிகளில் 8,500 ஏக்கரில் தென்னை விவசாயம் நடக்கிறது. வறட்சி, மின்தட்டுப்பாட்டால், தென்னை மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலையில், விளையும் காய்கள் நிறம் மாறி சிறுத்துக் காணப்படுகின்றன. இதை வியாபாரிகள் வாங்க விரும்புவதில்லை. அரசு கொள்முதல் நிலையம் இல்லாததால், நன்றாக விளைந்த காய்களை, வியாபாரிகள் நிர்ணயிக்கும் விலைக்கே கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. பாடுபட்டு உழைத்தும் அதற்குரிய பலன் கிடைக்காததால் சிலர் தங்களது தோப்புகளை அழித்து பிளாட்டுகளாக மாற்றி, விற்றுவருகின்றனர்.

கவிபிரகாஷ்: ஏழு ஏக்கரில் தென்னை விவசாயம் செய்து வருகிறேன். முன்பு 40 நாட்களுக்கு ஒருமுறை தேங்காய்கள் பறிப்போம். தற்போது, மின் தட்டுப்பாட்டால் உரிய நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச முடியாததால், காய்கள் பறிக்க 60 நாட்களுக்கு மேலாகிறது. தண்ணீர் பற்றாக்குறையால் பெரும்பாலான காய்கள் நிறம் மாறி சிறுத்துக் காணப்படுவதால், அவற்றை வியாபாரிகள் வாங்குவதில்லை. முன்பு ஒரு ஏக்கருக்கு ரூ.5000 லாபம் கிடைத்த நிலையில் தற்போது ரூ.2000 கிடைப்பதே அரிது.

திருஞானசம்பந்தம்: பெரும்பாலான தென்னை விவசாயிகள் வியாபாரிகளிடம் முன்பணம்

வாங்கிவிடுகின்றனர். அதனால் அவர்கள் நிர்ணயிக்கும் விலைக்கு காய்களை கொடுக்கவேண்டிய நிலை. உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காத விரக்தியில் தோப்புகளை அழித்து பிளாட்டுகளாக மாற்றி வருகின்றனர். இப்பகுதியில் அரசு கொள்முதல் நிலையம் அமைத்தால் மட்டுமே, தென்னந்தோப்புகள் பிளாட்டுகளாக மாறுவதைத் தடுக்கமுடியும், என்றனர்.

## 25 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள்...திறப்பு:கடந்த ஆண்டை விட குறைவு என்பதால் அதிருப்தி

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், 25 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டை விட இந்த எண்ணிக்கை குறைவு என்பதால் விவசாயிகள் அதிருப்தி அடைந்து உள்ளனர்.தஞ்சாவூருக்கு அடுத்தபடியாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெல் உற்பத்தி அதிகம். தற்போது, "பின் சம்பா' எனப்படும் நவரை பருவத்தில் பயிரிடப்பட்ட நெற்பயிர், அறுவடை செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 44:அறுவடை செய்யும் நெல்லை கொள்முதல் செய்வதற்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில், மாவட்டத்தில் 25 இடங்களில், @நற்று முன்தினம், நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில், 44 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இம்முறை, 25 மையங்கள் மட்டுமே திறக்கப்பட்டுள்ளன. குறைவான எண்ணிக்கையில் திறக்கப்பட்ட நிலையங்களும், தேவையான இடங்களில் திறக்கப்படவில்லை என, விவசாயிகள் புகார் கூறி உள்ளனர். மேலும், நெல் கொள்முதல் நிலையம் தாமதமாக, மார்ச் மாதத்தில் திறக்கப்பட்டுள்ளது எனவும், குற்றச்சாட்டு எழுந்துள்ளது."@காரிக்கை வைக்கலாம்' இதுகுறித்து, முதுகரை கிராமத்தை சேர்ந்த விவசாயி, சிவலிங்கம் கூறுகையில்,""கடந்த ஆண்டு எங்கள் ஊரில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. மொத்தம், 35 ஆயிரம் மூட்டை நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், இந்த முறை நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. இதனால் தனியாரிடம் நெல்லை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் எடையில் மோசடி செய்கின்றனர். விலையும் குறைவாக தருகின்றனர். இதனால் நஷ்டம் ஏற்படுகிறது," என்றார்.

இது குறித்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் கூறுகையில், "ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளிடம் கேட்டு, நெல் கொள்முதல் நிலையம் திறப்போம். இம்முறை வேளாண் அலுவலர்கள் கொடுத்த பட்டியலின்படி, 25 இடங்களில் கொள்முதல் நிலையங்களை திறந்துள்ளோம். இதில், கடந்த ஆண்டு இடம்பெற்ற இடங்கள், இம்முறை இடம்பெறவில்லை

என்பது உண்மை தான்' என்றனர்.@மலும், "இருப்பினும், விவசாயிகள் குறிப்பிடும் இடங்களிலும், நெல் கொள்முதல் நிலையம் திறக்க தயாராக உள்ளோம். ஒரு நாளைக்கு, 75 லட்சம் ரூபாய்க்கு நெல் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நெல் அதிகம் வந்தால், கூடுதல் தொகை கேட்கப்படும்' என்றனர்.

கொள்முதல் விலை:ஒவ்வொரு மையத்திலும், நெல் கொள்முதல் செய்வதற்கு, மூன்று ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இங்கு சன்னரகம், 100 கிலோ கொண்ட மூட்டை, 1,350 ரூபாய்க்கும்; மோட்டா ரக நெல், 1,300 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. சன்ன ரகத்திற்கு மத்திய அரசு 1,280 ரூபாயும், மாநில அரசு 70 ரூபாயும் வழங்குகின்றன. மோட்டா ரகத்திற்கு மத்திய அரசு 1,250 ரூபாயும், மாநில அரசு 50 ரூபாயும் வழங்குகின்றன.

25 இடங்கள்:எல்.எண்டத்தூர், ஒரத்தி, ஆத்தூர், சூணாம்பேடு, சித்தாமூர், ஊனமலை, புலியரங்கோட்டை, காவனூர்புதுச்சேரி, நல்லாம்பூர், ஓனம்பாக்கம், பாலூர், பவுஞ்சூர், சாலவாக்கம், தாமல், வேடபாளையம், தென்னேரி, அகரம், அவளூர், நெரும்பூர், அரும்புலியூர், வயலக்காவூர், திருமுக்கூடல், மணப்பாக்கம், முள்ளிகுளத்தூர், புலிப்பரக்கோவில் ஆகிய இடங்களில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

## கோடை கால பயிர்களுக்குமண் பரிசோதனை அவசியம்

காஞ்சிபுரம்:கோடை காலம் துவங்கியிருப்பதால், நிலங்களின் மண் தண்மையை பரிசோதனை செய்துக் கொள்ள வேண்டியது அவசியம் என, வேளாண்மை துணை இயக்குனர் சீதாராமன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் கூறியதாவது:கோடை காலத்தில், சொர்ணவாரி பட்டம் துவங்க உள்ளது. ஏரிகள் வறண்டு கிடப்பதால், குறைந்த தண்ணீரை பயன்படுத்தி விவசாயம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அறுவடை முடிந்த நிலங்களில், மண் தன்மையை பரிசோதனை செய்வது அவசியம். இதன் மூலம் விளை நிலங்களில், எந்த வகையான பயிர்களைப் பயிரிடலாம் என, வேளாண் துறை அதிகாரிகள் பரிந்துரை செய்வர். இதன் மூலம் விவசாயிகளுக்கு உரச்செலவு மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து செலவு வெகுவாக குறையும். இதற்காக விவசாயிகள் தங்கள் நிலங்களில் மண் மாதிரி எடுத்து, நேரடியாக பஞ்சுப்பேட்டையில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் செயல்படும், மண் மாதிரி பரிசோதனைக் கூடத்திற்கு கொண்டு வரலாம். இயலாத விவசாயிகள், அருகில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகங்களில், வேளாண் அலுவலர்களிடம் மண் மாதிரிகளை வழங்கலாம். மண்

பரிசோதனையின் முடிவுகள், விவசாயிகளுக்கு உடனடியாக தெரிவிக்கப்படும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நெல் வியாபாரிகள்- விவசாயிகள் கூட்டம்:காஞ்சிபுரத்தில் நாளை நடக்கிறது

காஞ்சிபுரம்:தனியார் நெல் மண்டி வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் கூட்டம், காஞ்சிபுரத்தில், நாளை(21ம் தேதி) காலை 11:00 மணிக்கு நடைபெற உள்ளது.காஞ்சிபுரம் மாவட்டத்தில், தற்போது நெல் அறுவடை நடந்து வருகிறது. அரசு சார்பில் நெல் கொள்முதல் செய்ய, முக்கிய ஊர்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. எனினும், தனியார் வியாபாரிகளிடம் கடன் வாங்கி விவசாயம் செய்தவர்கள், அவர்களிடம் நெல்லை விற்பனை செய்கின்றனர். அதேபோல், நெல் கொள்முதல் நிலையங்களுக்கு செல்லாத விவசாயிகளும், தனியாரிடம் நெல் விற்பனை செய்கின்றனர்.
ஆனால், தனியார் நெல் வியாபாரிகள், எடை மோசடியில் ஈடுபட்டு, வியாபாரிகளை ஏமாற்றுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. நெல் விற்பனைக்கு வரும்போது, கோணி சாக்குடன் சேர்த்து, 75 கிலோ எடை போட வேண்டும். வியாபாரிகள், 77 கிலோ நிர்ணயம் செய்துள்ளனர். அதையும் மீறி சில வியாபாரிகள், 80 கிலோ எடை போடுகின்றனர். அதேபோல், நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. வியாபாரிகள் அப்போதைய சூழலுக்கேற்ப, தாங்கள் விரும்பிய விலையை நிர்ணயம் செய்கின்றனர். இதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.எடை மோசடியை தடுத்து நிறுத்த வேண்டும். நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என, விவசாயிகள் குறை தீர்வு கூட்டத்தில், விவசாயிகள் வலியுறுத்தினர். அதைத் தொடர்ந்து, விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கூட்டத்தை நடத்த, மாவட்ட ஆட்சியர் சித்ரசேனன் உத்தரவிட்டார்.
அதன்பேரில் நாளை காலை 11:00 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள, மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கூட்டம் நடைபெற உள்ளது. இது தொடர்பாக, விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு, காஞ்சிபுரம் விற்பனைக்குழு செயலர் ஜெயக்குமார் கடிதம் அனுப்பியுள்ளார்.

## குறைந்த நீரில் மலர் சாகுபடி

மதுரமங்கலம்:பருவமழை பொய்ப்பு, கூலி ஆட்கள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ள மதுரமங்கலம் விவசாயிகள், தற்போது குறைந்த நீர் பாசனத்தில், அதிக லாபம் தரும் மலர் சாகுபடியில், ஆர்வம் காட்டி வருகின்றனர்.ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில், 58 ஊராட்சிகள் உள்ளன. இப்பகுதியில், விவசாயம் பிரதான தொழிலாக இருந்து வந்தது. இதற்கு, ஏரி நீர் பாசனம் முக்கிய ஆதாரமாக விளங்கிய நிலையில், பருவ மழை பொய்ப்பு, நீர் வரத்து குறைவு போன்ற காரணங்களால், படிப்படியாக விவசாயம் நலிவடைந்தது.இதனால், பெரும்பாலானோர், விவசாயத் தொழிலை விட்டுவிட்டு, ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் சிப்காட் வளாகங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் வேலைக்கு சென்றுவிட்டனர். பாதிப்பு:இதன் காரணமாக, சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்த விவசாயத்திற்கு நாற்று எடுக்க, நடவு செய்ய, களை பறிக்க ஆட்கள் இல்லாமல், விவசாயத் தொழில் பெருமாளவில் பாதிக்கப்பட்டது. இதையெல்லாம் பொருட்படுத்தாமல், தங்கள் நிலத்தில், தொடர்ந்து நெல் சாகுபடி செய்த விவசாயிகள் நஷ்டத்தையே சந்தித்து வந்தனர்.இதனால், மதுரமங்கலம் பிர்காவிற்கு உட்பட்ட ஒரகடமகாதேவி மங்கலம், கப்பான்கோட்டூர், பிச்சிவாக்கம், சிவபுரம் ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகள், நெல், வேர்க்கடலை பயிர் செய்வதை விட்டுவிட்டு, மாற்று பயிர்களாக, மல்லி, கனகாம்பரம், ரோஜா போன்ற, மலர் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.மலர் சாகுபடி முறையில், குறைந்த செலவு மற்றும் குறைவான நீர் பாசனத்தில் அதிக லாபம் கிடைப்பதுடன், குறைந்த கூலி ஆட்கள் மட்டுமே தேவைப்படுகிறது. 50 சென்ட் நிலத்தில், பயிரிடப்படும் மல்லி செடிகளில் இருந்து, தினசரி, 10 முதல் 15 கிலோ மல்லி கிடைக்கிறது.

தினமும் "வருமானம்':இதுகுறித்து, ஒரகடமகாதேவி மங்கலம் கிராமத்தை சேர்ந்த விவசாயி சுப்பிரமணி கூறியதாவது:விவசாயத்திற்கு, கூலி ஆட்கள் மற்றும் நீர் பற்றாக்குறை பிரச்னை உள்ளதால், தற்போது, எனக்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தில், 50 சென்ட்டில் மல்லி, 50 சென்ட்டில் ரோஜாவும் பயிரிட்டுள்ளேன். இதற்கு, குறைந்தளவு நீர் மற்றும் கூலி ஆட்கள் போதுமானதாக உள்ளது. தினமும், அதிகாலை 5:00 மணி முதல் பூக்களை பறித்து, அதை, காஞ்சிபுரம் மற்றும் கோயம்பேடு மார்கெட்டுக்கு விற்பனைக்காக அனுப்புகிறேன். தினசரி வருவாய் கிடைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## சேதமடைந்த ஏரி மதகில் நீர் விரயம்:விவசாயிகளுக்கு சிக்கல்

சித்தாமூர்:பருக்கல் ஏரியின் மதகு சேதமடைந்துள்ளதால், தினசரி ஏராளமான நீர் வீணாகி வருகிறது. எனவே, பழுதடைந்த மதகை சரி செய்து தர @வண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.சித்தாமூர் ஒன்றியத்திற்கு உட்பட்டுள்ளது பருக்கல் கிராமம். இங்கு, 1,500க்கும் @மற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்கள், விவசாயத்தை முக்கியத் தொழிலாக கொண்டுள்ளனர். இதற்கான நீர் ஆதாரமாக, இங்குள்ள பருக்கல் ஏரி விளங்குகிறது. 115 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரியின், நீரை பயன்படுத்தி, 350 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றனர். பேரம்பாக்கம், பெருக்கரணை, தண்டலம் ஆகிய ஏரிகளிலிருந்து வரும் உபரி நீர், பருக்கல் ஏரியில் வந்து சேகரமாகின்றது. இதில், மேட்டு பருக்கல், தொட்டிகுப்பம் மற்றும் புத்தூர் கிராம மக்கள், விவசாய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஏரி, பல ஆண்டுகளாக தூர் வாரப்படாததால், நீர் பிடிப்பு பகுதி முழுவதும் காட்டாமணக்கு செடி முளைத்து உள்ளது.மதகு பழுது:ஏரியில், இரண்டு மதகுகள் அமைந்துள்ளன. இதில், ஒரு மதகு, கடந்த இரண்டு ஆண்டுகளாக பழுதடைந்துள்ளது. மழைக் காலங்களில், இதன் வழியாக, ஏராளமான நீர் விரயமாகி வருகிறது. இதனால், ஆண்டுதோறும் இரண்டு போகம் பயிரிடக்கூடிய விவசாயிகள், மதகு ஓட்டையால், ஒரு போகம் மட்டுமே பயிரிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஏரி நீரை, விவசாய நிலத்திற்கு கொண்டு செல்ல, சிமென்ட் கால்வா# அமைக்கப்பட்டுள்ளது. இக்கால்வாயில், ஏராளமான செடிகள் முளைத்துள்ளதால், அடைப்பு ஏற்பட்டு, தண்ணீர் முழுமையாக செல்ல முடிவதில்லை.இதுகுறித்து, பருக்கல் ஊராட்சி தலைவர் ராமலிங்கம் கூறுகையில், ""ஏரியில், காட்டாமணக்கு செடி முளைத்துள்ளதால், நீர் பிடிப்பு பகுதி குறைந்துள்ளது. மதகு ஓட்டை சரி செய்யப்படாததால், இந்த ஆண்டு, பயிரிடப்பட்டுள்ள, 200 ஏக்கர் நெற்பயிர், கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மதகு ஓட்டையை சரி செய்து, ஏரியை தூர்வார அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

நடவடிக்கை:அச்சிறுப்பாக்கம், பொதுப்பணி துறை இளநிலை பொறியாளர் சுப்பிரமணியன் கூறியதாவது:பருக்கல் ஏரியில், பத்து ஆண்டுகளுக்கு முன், உலக வங்கி திட்டத்தில் கலங்கல் மற்றும் மதகுகள் சரி செய்யப்பட்டன. தற்போது நீர்வள, நிலவள திட்டத்தில், பல்வேறு ஏரிகள் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.இத்திட்டத்தில் ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்ட ஏரிகள் விடுபட்டுள்ளன. அந்த ஏரிகளுக்கு, தற்போது மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உலக வங்கி ஒப்புதல் பெறப்பட்டு, அரசு நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்ததும், பணி மேற்கொள்ளப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

## கோடை வெயில், மின்வெட்டை சமாளிக்க பனை ஓலை விசிறிகள்...தயார்:இரண்டு தலைமுறையாக குடிசை தொழிலாக செய்யும் கிராமம்

திருத்தணி:கோடை வெயில் மற்றும் மின்வெட்டை சமாளிக்கும் வகையில், பனை ஓலை விசிறிகள் தயாரிக்கும் பணியில், மாவட்டத்தில் ஒரு கிராமமே ஈடுபட்டு உள்ளது. பிளாஸ்டிக் விசிறிகள் எளிதில் கிடைத்தாலும், மக்கள் மத்தியில் பனை ஓலை விசிறிகளுக்கு இன்னமும் நல்ல வர@வற்பு உள்ளது. இதனால், திருத்தணி ஒன்றியம், சிறுகுமி ஊராட்சிக்கு உட்பட்ட வி.சி.ஆர்., கண்டிகை கிராமத்தில், 250 குடும்பத்தினர் பனை ஓலை விசிறி தயாரிப்பை பிரதான தொழிலாக செய்து வருகின்றனர்.

10 மாதம் தயாரிப்பு:விசிறிகள் தயார் செய்வதற்கு தேவையான பனைஓலைகளை கே.ஜி.கண்டிகை, தாடூர், செருக்கனூர், கோரமங்கலம், புளியமங்கலம், பராஞ்சி, பொன்பாடி, கூடலூர் மற்றும் ஆந்திர மாநிலத்தில் சித்தூர், ஐயன்கண்டிகை, பொன்னை, கல்காநெல்லூர், புங்கல் ஆகிய பகுதிகளில் இரண்டு அல்லது நான்கு நாள் தங்கியிருந்து சேகரிக்கின்றனர்.பின்னர், அவற்றை கொண்டு வந்து வெட்டி காயவைத்து, வண்ணம் பூசி, காய்ந்த உடன் இறுதி வடிவம் கொடுக்கின்றனர். ஜனவரி மாதம் முதல் அக்@டாபர் மாதம் வரை, முழுநேரமாக விசிறிகள் தயார் செய்யப்படுகின்றன. இவற்றை மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்கின்றனர்.

இது குறித்து, வி.சி.ஆர். கண்டிகையை சேர்ந்த பனை ஓலை தயாரிப்பாளர்கள் கூறியதாவது:இரு மாதம் ஓய்வு:நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய இரு மாதங்கள் மட்டும் எங்களுக்கு ஓய்வு கிடைக்கிறது. மற்ற 10 மாதங்களும் விசிறி தொழில்தான் செய்வோம். பனைஓலைகளை சில இடங்களில், இலவசமாகவும், பல இடங்களில் ஒரு ஓலைக்கு, 1 ரூபாய் முதல் 2 ரூபாய் வரை கொடுத்து வாங்குவோம். 250 ஓலைகள் சேகரித்த பின்பு, எங்கள் கிராமத்திற்கு கொண்டு வருவோம். தயாரிப்பு செலவுகளோடு சேர்த்து, ஒவ்வொரு விசிறியையும் 10 ரூபாய் முதல் 15 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம்.

ஒரு குடும்பம் 12 மணி நேரம் தொடர்ந்து இந்த வேலையை செய்தால், ஒரு நாளைக்கு, 80 முதல் 100 விசிறிகள் தயார் செய்யலாம். இத்தொழிலை நாங்கள் இரண்டு தலைமுறைகளாக செய்து வருகிறோம். இத்தொழிலில் எங்களுக்கு போதிய வருமானம் கிடைப்பதால், இதையே குடிசை தொழிலாக செய்கிறோம்.பனை ஓலை விசிறிகளுக்கு தற்போதும் கிராக்கி இருப்பதால், விசிறிகள் தயாரிக்கும் தொழிலை எங்களால் விட முடியவில்லை. இத்தொழில் அடுத்த தலைமுறைக்கும்

இருக்கும் என, நம்புகிறோம். எங்களுக்கு அரசு கடனுதவி வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது நீண்ட கால கோரிக்கையாகும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## முடிவுக்கு வந்தது கரும்பு அறுவடைபுதிய நடவுக்கு தயாராகும் விவசாயிகள்

கிருஷ்ணாகுப்பம்:கரும்பு அறுவடை முடிவுக்கு வந்ததை அடுத்து, புதிய நடவுக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். இதையடுத்து, தரமான விதை கரும்புக்கு கடும் கிராக்கி நிலவுகிறது. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட விவசாயிகள், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் கரும்பு அறுவடை துவக்கினர். ஆறு மாதங்களாக நடந்த அறுவடை, தற்போது இறுதி கட்டத்தை நெருங்கி உள்ளது. 90 சதவீத விவசாயிகள் அறுவடையை முடித்து, தற்போது புதிதாக கரும்பு நடவுப் பணிகளை துவக்கி உள்ளனர். இதனால், விதைக் கரும்புக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு உள்ளது.கரும்பு ஒரு முறை நடவு செய்தால், மூன்று முறை அறுவடை செய்யலாம். ஒவ்வொரு அறுவடைக்கு பின்னரும், கரும்பு வயல் தீயிட்டு கொளுத்தப்படும். காய்ந்த கரும்பு சோலைகள் எரிந்தபின், கரும்பு வெட்டப்பட்ட வேர்ப் பகுதியில் இருந்து, புதிதாக செடிகள் வளர துவங்கும். மூன்றாவது முறையாக வளரும், கரும்பு செடிகள் சற்று தரமில்லாததாக இருக்கும். நான்காவது முறையாக, அதே செடிகளில் வளரும் கரும்பு முற்றிலும் வளர்ச்சி குறைந்து காணப்படும்.இதையடுத்து, நன்கு உழுது பதப்படுத்தப்பட்ட வயலில், புதிய கரும்பு நடவு செய்ய வேண்டும்.திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு, திருத்தணி, உள்ளிட்ட பகுதிகளில் கரும்பு விவசாயிகள், தற்போது அறுவடை முடித்து, புதிய நடவுப் பணிகளில் ஈடுபட்டு உள்ளனர்.

## தேயிலை தூள் வர்த்தகமும் பாதிப்பு

குன்னூர்: மாவட்டத்தில் பசுந்தேயிலை வரத்து குறைந்துள்ளதால், தேயிலை வர்த்தகம் பாதிக்கும் அபாயம் உள்ளது. நீலகிரியில் பல ஆயிரம் எக்டர் பரப்பளவில் தேயிலை சாகுபடி செய்யப்படுகிறது. தேயிலை தோட்டங்களில் பறிக்கப்படும் பசுந்தேயிலை, தொழிற்சாலைகள் மூலம் தூளாக உற்பத்தி செய்யப்பட்டு, குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையம் மற்றும் கூட்டுறவு தேயிலை ஏல மையத்தின் மூலம் வாரந்தோறும் விற்கப்படுகிறது. தற்போது, மாவட்டத்தில் நிலவும் வறட்சியால், பசுந்தேயிலை வரத்து குறைந்து, தேயிலை தூள் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், குன்னூர் தேயிலை ஏல மையத்தில் நடக்கும் வர்த்தகமும்

பாதிக்கும் அபாயம் உள்ளது. குன்னூர் தேயிலை ஏல மையத்தில் நடந்த 7வது ஏலத்தில் 14.92 லட்சம் கிலோவும், 8வது ஏலத்தில் 12.52 லட்சம் கிலோவும், 9வது ஏலத்தில் 10.97 லட்சம் கிலோவும், 10வது ஏலத்தில் 9.60 லட்சம் கிலோவும் தேயிலை தூள் வரத்து இருந்தது. 11வது வாரத்தில் வரத்து 8.60 லட்சம் கிலோவாக குறைந்தது.

இந்த அளவே இந்தாண்டின் குறைந்த அளவாகும். "தேயிலை வரத்து குறைந்துள்ளதால் தொழிற்சாலைகளில் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே உற்பத்தி நடக்கிறது. இதில், ஒரு "ஷிப்ட்' மட்டுமே ஊழியர்களுக்கு பணி இருக்கிறது' என தேயிலை வாரிய உறுப்பினர் டாக்டர் ராமு தெரிவித்துள்ளார்.

## கால்நடைகளுக்கு மஞ்சள் காமாலை

குஜிலியம்பாறை:லந்தகோட்டை ஊராட்சி கன்னிமார்பாளையத்தை சேர்ந்தவர் பழனிச்சாமி,60.இவர் வளர்த்து வந்த எருமை மாடு, மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு, சில நாட்களாக எழுந்திருக்க முடியால், மேய்ச்சலின்றி உள்ளது. இதே போல் நாகப்பனுக்கு சொந்தமான, எருமை மாடும், நோய் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளன. இப்பகுதியில் பலரது கால்நடைகள் நோய் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி, நோய் தாக்கத்கதில் இருந்து கால்நடைகளை மீட்க, கால்நடைத்துறையினர் முன்வர வேண்டும்.

## ஏலக்காய் ஆராய்ச்சி நிலையம்செயல்பட நடவடிக்கை:தினமலர் செய்தி எதிரொலி

தாண்டிக்குடி:மத்திய வாசனை மற்றும் ஏலக்காய் நிலையம் தாண்டிக்குடி பகுதியில் செயல்பட அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நிலம் சர்வே செய்யும் பணி விரைவில் துவங்க உள்ளது.கீழ்பழநி மலையை மையமாக கொண்டு தமிழ்நாட்டு விவசாயிகளுக்காக இந்திய ஏலக்காய் ஆராய்ச்சி நிலையம் 1980 ல் தடியன்குடிசையில் துவங்கப்பட்டது. ஆராய்ச்சி பணிக்கு வனத்துறை நிலம் சுமார் 25 ஹெக்டேர் குத்தகைக்கு பெறப்பட்டு கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ஏலம், மிளகு, வெண்ணிலா, மஞ்சள், இஞ்சியில் தனது ஆராய்ச்சி பணியை செய்து வந்தது.2000-ல் குத்தகை காலம் முடிந்து வனத்துறை 2005 ல் நிலம் ஒப்படைப்பு செய்ய கோரிய நிலையில் சிக்கல் எழுந்தது.

இதையடுத்து கடந்த சில ஆண்டுகளாக ஆராய்ச்சி பணிகள் முடக்கப்பட்டு விஞ்ஞானிகள், அலுவலர்கள் இடம் மாற்றப்பட்டனர். புதிய இடத்தில் ஆராய்ச்சி நிலையம் செயல்பட போதுமான

நிதியிருந்தும் கால தாமதமாகி கிடப்பில் இருந்து வந்தது. கடந்த 2006ல் மாவட்ட நிர்வாகம் தாண்டிக்குடி ஊராட்சி பட்லாங்காடு பகுதியில் ஆராய்ச்சி நிலையம் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வருவாய்துறையினரால், நிலம் கையகப்படுத்துவதில் தாமதமாகியது. இதுகுறித்து, தினமலர் நாளிதழில் செய்தி வெளியானது. இதையடுத்து அரசு பட்லாங்காடு பகுதியில் உள்ள நிலத்தை சர்வே செய்து, ஏலக்காய் ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்க உத்தரவிட்டுள்ளது.

## பூத்துக்குலுங்கும்காபி செடிகள்

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மலைப்பகுதியில் காபி செடிகளில் பூக்கள் பூத்து குலுங்குகின்றன. ஆண்டுதோறும் மார்ச் மாதம் காபி செடி பூக்கும் பருவம். இதற்கு முன் பெய்த மழைக்கு ஓரளவு பூ பூத்தது. தற்போது பெய்த மழைக்கு அதிகளவில் காபி செடியில் பூக்கள் காணப்படுகின்றன. அரபிகா, ரோபஸ்டா வகை பூக்களால் மலைப்பகுதி முழுமையும் மணம் வீச தொடங்கியுள்ளது. இதனால் தேனீக்களின் வருகை அதிகரித்து காணப்படுகிறது. தற்போதுள்ள தட்பவெப்பநிலை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது

## தேனியை வறட்சி மாவட்டமாக அறிவிக்க விவசாயிகள் உண்ணாவிரதம்

தேனி:தேனியை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வலியுறுத்தி,தேனி ஸ்டேட் வங்கி திடலில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். தேனி மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன் தலைமை வகித்தார். செயலாளர் பிரபாகரன் முன்னிலை வகித்தார். வாழை உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் நாராயணசாமி, அல்லிநகரம் விவசாயிகள் பாதுகாப்பு சங்க தலைவர் அழகர்சாமி, லட்சுமிபுரம் விவசாயிகள் நலசங்க பொருளாளர் பரசுராம் உட்பட பலர் பங்கேற்றனர். தேனி மாவட்டத்தில் மழை பொய்த்து, கண்மாய்கள், நீர் நிலைகள் வறண்டதால் வறட்சி மாவட்டமாக அறிவித்து, மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க வேண்டும். தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகள் வழங்கிய பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்புக்கு வெட்டுக்கூலி, லாரி வாடகையினை ஏற்றுக் கொண்டு, டன்னுக்கு விலை 4 ஆயிரம் ரூபாயாக நிர்ணயம் செய்ய வேண்டும். அனைத்து விவசாயிகளும் சொட்டுநீர் பாசனம் அமைக்கும் வகையில், 100 சதவீதம் மானியம் வழங்க வேண்டும். உரம் விலை உயர்வினை கை விட வேண்டும், என கோஷங்கள் எழுப்பினர்.

## கோயில் பிரகாரத்தில் "அபூர்வ' வாழை மரங்கள்: கதளிவனேஸ்வரர் கோயிலின் தனித்துவம்

திருப்புத்தூர்:பிரகாரம் முழுவதும் வாழை மரங்கள் நிறைந்திருப்பதும், தல விருட்சமாக அபூர்வ குணம் கொண்ட வாழை மரங்கள் இருப்பதும், திருக்களம்பூர் கதளிவனேஸ்வரர் கோயிலின் தனித்துவமாக உள்ளது. சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் அருகேயுள்ள திருக்களம்பூர் பகுதி, முன்பு கதளி வனமாக இருந்துள்ளது. இதனால், இக்கோயிலின் மூலவர் "கதளிவனேஸ்வரர்' என அழைக்கப்படுகிறார். இக்கோயில் பிரகாரம் முழுவதும் வாழை மரங்கள் வாழையடி, வாழையாக வளர்ந்து வருகின்றன.

யாரும் இம்மரங்களுக்கு தண்ணீர் விடுவது இல்லை. பக்தர்கள் இவ்வாழை மரங்களுக்கு இடையே சென்று பிரகாரத்தை வலம் வருகின்றனர். இந்த மரங்களின் தண்டுப்பகுதியை வெட்டினால், சிவப்பு நிற நீர் வருகிறது. பழங்கள் பூவன்பழம் போலவும்,உரித்தால் ரஸ்தாளிபழம் போலவும் உள்ளது. இப்பழங்களை யாரும் சாப்பிடுவதில்லை.சாப்பிட்டால், தோல் நோய் வரும் என்ற அச்சம் உள்ளது.பக்தர்கள் விருப்பப்பட்டால், இப்பழங்கள் மூலம் தயாரிக்கப்படும் பஞ்சாமிர்தம் மூலவருக்கு படைக்கப்படுகிறது. பக்தர்களும் எடுத்துக் கொள்கின்றனர்.இப்பஞ்சாமிர்தம் விரைவில் தண்ணீராக உருகி விடுகிறது. இக்கோயிலின் மற்றொரு சிறப்பு, இங்குள்ள சிவலிங்கம் மேற்புறம் 3 பிளவுகளாக இருப்பது. இந்தத் தோற்றத்தில், வேறு எந்த கோயிலிலும் லிங்கம் இல்லை என்று கூறப்படுகிறது. குதிரையின் குளம்பு பட்டதால்லிங்கத்தில் இப்பிளவு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.இப்பிளவு ஏற்பட்டதற்கு இரு வித காரணம் கூறுகின்றனர். முதலாவதாக, இப்பகுதியில் தான் ராமாயண காலத்தில் வால்மீகி, வாமதேவர், வசிஷ்டர் ஆகியோர் அசுவமேதயாகம் நடத்தி,செங்கதளியை (செவ்வாழை) யாகத்தில் இட்டதாகவும், ராமருடைய பட்டத்துக் குதிரையை அவரது மகன்கள் லவ, குசர்கள் இங்கு பிடித்துக் கட்டியதாகவும், இந்தக் குதிரையின் கால் குளம்பு பட்டதால், லிங்கத்தில் இப்பிளவு ஏற்பட்டதாகவும், இந்தப் பகுதி "குளம்பூர்' என்றழைக்கப்பட்டு, பின்னர் 'திருக்களம்பூர்' என மருவியதாகவும் புராணச் செய்திகள் கூறுகின்றன. இரண்டாவதாக, இக்கோயிலின் மூலவரான கதளிவனேஸ்வரர், வைத்தியநாதர் என்றும் அழைக்கப்படுகிறார்.முன்னர் பாண்டிய மன்னர் ஒருவர் இப்பகுதியில் வேட்டையாடுகையில், அவரது குதிரையின் கால் குளம்புகள் மண்ணில் புதைந்திருந்த சிவலிங்கத்தின் மேல் பட்டு, ரத்தம் வடிந்ததாகவும், இதனால், மன்னருக்கு கண் பார்வை போய், பின்னர் இறைவன் " முதியவராக ' வந்து வைத்தியம் செய்து, கண்ணொளியை

வழங்கியதால் "வைத்தியநாதன்' என்று அழைக்கப்படுவதாகவும் செவி வழிச் செய்திகள் கூறுகின்றன.

இக்கோயிலில் ரிஷபவாகனத்தில் எழுந்தருளியுள்ள மீனாட்சி சுந்தரேஸ்வருக்கு வியாழக்கிழமை பாயாசம் வைத்து வழிபட்டால், திருமணம் கை கூடும் என்றும், குழந்தை இல்லாதவர்கள்,இங்குள்ள கொடிமரத்திற்கு வாழைக்காயை பலி கொடுத்தால், மகப்பேறு கிட்டும் என்றும் நம்புகின்றனர்.புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த இக்கோயில், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்களம்பூர், சிங்கம்புணரி, பொன்னமராவதி யிலிருந்து 10 கி.மீ.,தொலைவிலும், திருப்புத்தூரிலிருந்து 10 கி.மீ.,தொலைவிலும் உள்ளது.

## மொட்டைமாடியில் இயற்கை தோட்டம் அசத்தும் ராஜபாளையம் விவசாயி

ராஜபாளையம்:இயற்கை உரம் தயாரித்து வீட்டு மொட்டை மாடியை காய்கறி தோட்டமாக, விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் விவசாயி மாற்றி உள்ளார். தொற்றுநோய் இல்லாமல் வளரும் காய்கறிகளை, வீட்டின் அன்றாட காய்கறி தேவைக்கு பயன்படுத்தி வருகிறார்.ராஜபாளையம் சக்கராஜாகோட்டையை சேர்ந்தவர் சுப்பிரமணிய ராஜா, 67. நெல், வாழை,கரும்பு விவசாயம் செய்து வந்தார். வயதானதால், வீட்டில் ஓய்வில் இருந்தார். தெரிந்த தொழிலை, வீட்டில் செய்ய திட்டமிட்டு, வீட்டிலேயே தோட்டம் அமைத்து பராமரிக்க முடிவு செய்தார். ஆறுமாதத்திற்கு முன் வீட்டு மொட்டைமாடியில் தக்காளி, வெண்டை செடிகளை பிளாஸ்டிக் டிரம், மண்தொட்டியில் நட்டார். செடி வளர துவங்கியது, பழங்கள், மண்டை வெள்ளம், கோமியம், நெய், பால், தயிர் சேர்த்து இயற்கை முறையில் உரம்தயாரித்து, பயன்படுத்தினார். தொற்றுநோய், பூச்சி தாக்குதலை தடுக்க, வேப்பங்கொட்டை சாறு எடுத்து அதை தண்ணீரில் கலந்து "ஸ்பிரே' செய்தார். செடிகள் காய்க்க துவங்கியுள்ளது.

இரும்பு டிரம்களில் வாழை, அகத்தி மரங்களையும், தண்டங்கீரை, அரைக்கீரையும் வளர்த்துள்ளார்.சுப்பிரமணிய ராஜா கூறுகையில், ""வாரம் ஒருமுறை வேப்பங்கொட்டை சாறு எடுத்து அடிஉரம் இடுகிறேன். இரு மாதத்திற்கு ஒருமுறை பஞ்சகவ்ய முறையில் உரம் தயாரித்து பயன்படுத்துகிறேன். வாடல், கருகல், தொற்றுநோய் இதுவரை வந்ததில்லை. காய்கள் "ப்ரெஷ்ஷாக' உள்ளன. உவீட்டின் தேவைக்கு தினமும் இந்த தோட்டத்தில் இருந்து பறித்து

கொள்கிறேன். மொட்டைமாடியை சோதனை களமாக்கி, இயற்கை விவசாயம்செய்கிறேன்" என்றார்.

## மீண்டும் யானைகள் அட்டகாசம் புளியங்குடி விவசாயிகள் கலக்கம்

புளியங்குடி:புளியங்குடி அருகே விவசாய நிலங்களுக்குள் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசம் செய்து தென்னை, தேக்கு உள்ளிட்ட மரங்களை நாசப்படுத்தியது.

புளியங்குடி வனச்சரகத்திற்கு உட்பட்ட செல்லுப்புளி பீட் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான ஏராளமான விவசாய நிலங்கள் உள்ளன. இங்கு நெல், மா, எலுமிச்சை, தென்னை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அப்பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான தோப்பிற்குள் நள்ளிரவில் மின்தடை செய்யப்பட்டிருந்த நேரத்தில் புகுந்த ஒரு யானை அப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்டிருந்த தென்னை மரங்களை பிடுங்கி நாசம் செய்தது.

அதனைத் தொடர்ந்து அருகில் இருந்த தேக்கு மரங்களையும் கீழே சாய்த்து நாசம் செய்துள்ளது. நள்ளிரவில் மரம் ஒடியும் சப்தம் கேட்டு அங்கு தங்கியிருந்த காவலர் டார்ச் லைட் கொண்டு அடித்து பார்த்த போது ஒரு யானை மரங்களை ஒடித்தது தெரியவந்தது. பின்னர் அவர் சத்தம் போட்டார். பின்னர் யானை அங்கிருந்து மெதுவாக நகர்ந்துசென்று சென்றது. செல்லும் வழியில் இருந்த சொட்டு நீர் பாசன குழாயை சேதப்படுத்தியது. நேற்று முன்தினம் மாலையில் இருள் ‹ழும் நிலையில் யானை ஒன்று தொடர்ந்து சப்தம் எழுப்பியவாறு சுற்றித்திருந்துள்ளது. பின்னர் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் யானையின் நடமாட்டம் குறித்து வனத்துறையினருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

யானைகள் அட்டகாசத்தால் விவசாயிகள் கடும் அச்சம் அடைந்துள்ளனர். ஏற்கனவே மின் தடை, பணியாளர்கள் பற்றாக்குறை, மழை அரசு குறைவு போன்ற பல்வேறு காரணங்களால் விவசாயமும், விவசாயிகளின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகின்றது. மேலும் விவசாயத்தை ஊக்குவிக்கும் விதமாக அரசு விவசாயிகளுக்கு இயந்திரங்கள் மானிய விலையில் மானியத்தில் சொட்டுநீர் பாசானம் போன்றவைகளையும் வழங்கி வருகின்றது. அரசினுடைய திட்டங்களை யாவும் நடைமுறைப்படுத்த வேண்டிய அதிகாரிகள் அலட்சியத்தால் வீணாகின்றது.

## ஈழத்து யானை அச்சுறுத்தல்

ஈழத்து யானை என்ற புதுவகையான யானை ஒன்று புளியங்குடி வனப்பகுதியில் முகாமிட்டுள்ளதாக கூறப்படுகிறன்றது. இவ்வகை யானைகள் உயரத்தில் சிறியதாகவும், காதுகள் பெரியதாகவும் இருக்கும். கடந்த சில நாட்களுக்கு முன்னர் கோட்டமலை பீட் பகுதியில் தனது குட்டியுடன் மேய்ச்சலில் ஈடுபட்டிருந்த யானை அவ்வழியாக சென்றவரை துரத்தியுள்ளது. இதை சற்றும் எதிர்பாராத அவர் பைக்கில் இருந்து கிழே விழுந்து காயங்களுடன் தப்பி சென்றுள்ளார். மூர்க்க குணம் கொண்ட இவ்வகை யானைகள் இப்பகுதியில் இல்லை. கடந்த சுமார் 6 ஆண்டுகளுக்கு முன் இவ்வகை யானை வனப்பகுதியை விட்டு வெளியேறி வந்துள்ளது. பின்னர் நீண்ட இடைவெளிக்கு பின் ஈழத்துயானை ஒன்று வனப்பகுதியை விட்டு வெளியேறி உள்ளதால் விவசாயிகளும் கலக்கம் அடைந்துள்ளனர். இந்த சம்பவத்தை கேள்விப்பட்டு வனத்துறையினர் யானையின் நடவடிக்கைகளை கண்காணித்து மீண்டும் வனப்பகுதிக்குள் அனுப்ப முயற்சிகள் மேற்கொண்டனர். அவர்களின் கண்களில் படாமல் டிமிக்கி கொடுத்து விட்டு மறைந்தது. மாவட்ட நிர்வாகமும், வனத்துறையினரும் விரைந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு செயலிழந்த சோலார் மின் வேலிகளை சீர்செய்வதற்கு பதிலாக மலையடிவாரப் பகுதிகளில் யானைகள் உள்ளிட்ட வனவிலங்குள் வெளியோறாமல் இருக்க அகழிகள் அமைத்தால் மட்டுமே வனவிலங்குகள் வனப்பகுதியை விட்டு வெளியேறாமல் இருக்கும் என கருத்து தெரிவித்துள்ளனர்.

## ஆழ்வார்குறிச்சி பகுதிகளில் மழையால் பாதிப்படைந்த விவசாய நிலங்களை எம்.எல்.ஏ., ராஜேந்திரன் பார்வையிட்டார்.

ஆழ்வார்குறிச்சி:ஆழ்வார்குறிச்சி பகுதிகளில் மழையால் பாதிப்படைந்த விவசாய நிலங்களை எம்.எல்.ஏ., ராஜேந்திரன் பார்வையிட்டார்.

கடந்த கார்பருவத்தில் விவசாயிகளுக்கு மழையில்லாததால் மக‘ல் பாதிக்கப்பட்டு நஷ்டமடைந்தனர். கார் பருவத்தில் பலர் அதற்குரிய நஷ்டஈடு கூட அரசிடமிருந்து பெறவில்லை. இந்நிலையில் பிசான பருவத்தில் ஆழ்வார்குறிச்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விளைநிலங்களில் பயிரிடப்பட்டிருந்தது. கடந்த மாதம் பெய்த திடீர் மழையால் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் முழுவதும் பாதிப்படைந்திருந்தது.

இந்நிலையில் மீண்டும் கடந்த சில தினங்களுக்கு முன்பு திடீரென விடிய விடிய பெய்த மழையால் அறுவைக்கு தயாரான நிலையில் இருந்த பயிர்கள் சாய்ந்த பல இடங்களில் முளைக்க துவங்கிவிட்டது. மேலும் பல இடங்களில் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழுகிவிட்டது. இதனால்

விவசாயிகள் நிவாரணம் வேண்டுமென அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். நேற்று ஆழ்வார்குறிச்சிக்கு எம்.எல்.ஏ., ராஜேந்திரன், அம்பை., தாசில்தார் சரஸ்வதி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து ஒவ்வொரு வயலாக பார்வையிட்டனர்.

எம்.எல்.ஏ.,வுடன் உள்ளாட்சி பிரதிநிதிகள், அதிகாரிகள் உட்பட பலர் வந்திருந்தனர்.

எம்.எல்.ஏ,விடம் விவசாயிகள் தங்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டதற்கு நேற்ற முன்தினம் கலெக்டரிடம் இதுகுறித்து பேசிவிட்டேன். பாதிப்படைந்த அனைவருக்கும் நிவாரணம் வழங்கிட முழு நடவடிக்கை எடுக்கப்படுமென கூறினார்.

## விவசாயிகள் சங்க ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி: தூத்துக்குடியில் விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. வறட்சி நிவாரணம் கேட்டும் தூத்துக்குடி தாலுகா அல்லிகுளம், சேர்வைகாரன்மடம், வாகைகுளம், புதுக்கோட்டை சுற்று பகுதியில் லாரிகள் மூலம் தண்ணீர் உறிஞ்செடுத்து தொழிற்சாலைகளில் விநியோகம் செய்ய தடை செய்யவும், நிலத்தடி நீரை பாதுகாக்கவும் பல ஆண்டுகள் குடியிருக்கும் முடிவைதானேந்தல், மஞ்சநீர்காயல், கோரம்பள்ளம் மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க அரசாணை வழங்க வலியுறுத்தி நடந்த ஆர்ப்பாட்டத்தை தமிழ்நாடு விவசாயிகள் சங்க தூத்துக்குடி ஒன்றியச் செயலாளர் சங்கரன், ஒன்றியத் தலைவர் மயிலேரும்பெருமாள், ஒன்றிய பொருளாளர் முனியசாமி முன்னிலையில் மாவட்டச் செயலாளர் பெருமாள் துவக்கிவைத்து பேசினார்.

மாவட்ட பொருளாளர் கணபதி மின் ஊழியர் மத்திய அமைப்பு, மாவட்டத் தலைவர் ரவிதாகூர், துணைத்தலைவர் சீனிவாசன், ஸ்ரீவைகுண்டம் ஒன்றிய தலைவர் பொன்ராஜ் ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து மாநில பொதுச் செயலாளர் சண்முகம் பேசினார். ஒன்றிய துணைச் செயலாளர் நயினார், ஆட்டோ தொழிலாளர் சங்க நிர்வாகி ராஜ், பார்வதி, ரவிந்திரன், சிவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## குமரியில் விதை கொள்கலன் வழங்கியதில் முறைகேடு 5 வேளாண் அதிகாரிகள் மீது வழக்கு * லஞ்சஒழிப்பு போலீஸ் நடவடிக்கையால் பரபரப்பு

நாகர்கோவில்:குமரி மாவட்டத்தில் வேளாண்மை துறையில் விதை கொள்கலன் வழங்கியதில் முறைகேடு நடந்த சம்பவம் தொடர்பாக 5 வேளாண் அதிகாரிகள் மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இது அதிகாரிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து நாகர்கோவில் லஞ்ச ஒழிப்பு போலீஸ் தரப்பில் கூறியிருப்பதாவது;
2010-11ம் ஆண்டு மத்திய அரசு வெளாண்மை துறையில் தமிழகத்தில் விதை கிராம திட்டம் என்ற திட்ட உதவிக்காக 26 கோடியே 39 லட்சம் நிதி உதவி வழங்கியிருந்தது. இத்திட்டத்தின் கீழ் தரமான விதை வழங்குதல், உழவர்களுக்கான பயிற்சி, மானியத்துடன் கூடிய தரமான விதை கொள்கலன் வழங்குதல் ஆகியவை அடங்கும். இதில் மானியத்துடன் கூடிய விதை கொள்கலன் வழங்கும் திட்டத்திற்கு தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் சேர்த்து ரூ.5.86 கோடி செலவில் 39650 விதை கொள்கலன் விவசாயிகளுக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் குமரி மாவட்டத்தில் உள்ள ராஜாக்கமங்கலம், குருந்தன்கோடு, தக்கலை, கிள்ளியூர், அகஸ்தீஸ்வரம், முஞ்சிறை, மேல்புறம் ஆகிய பஞ்சாயத்து யூனியன்களுக்கு 688 விதை கொள்கலன்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் தரமான விதை கொள்கலன்கள் வழங்கவேண்டும் என்ற நிலையில் நாகர்கோவில் வேளாண்மை இணை இயக்குனர் தலைமையில் ஒரு விதை கொள்கலன் தேர்வுகுழு அமைக்கப்பட்டது. இதில் உலோகத்தாலான கொள்கலன், அல்லது காகித கூழால் செய்யப்பட்ட கொள்கலன் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் குமரியில் அரசின் விதிமுறைக்கு மாறாகவும், விதை கொள்கலன் தேர்வு குழுவின் முடிவிற்கு முரணாகவும், தேர்வு செய்யப்பட்ட விதை கொள்கலன்களுக்கு பதிலாக முறைகேடாக தரமற்ற பிளாஸ்டிக் சின்டெக்ஸ் டேங்க் கொள்முதல் செய்து உழவர்களுக்கு வழங்கியதாக பல்வேறு புகார்கள் அரசின் கவனத்திற்கு சென்றது.

மேலும பல யூனியன்களில் உழவர்களுக்கு விதை கொள்கலன்கள் வழங்காமலே வழங்கியதாக முறைகேடு செய்ததும் தெரியவந்தது. இதுகுறித்து நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விசாரணை மேற்கொண்டு முறைகேடு குறித்த அறிக்கையை அரசின் கவனத்திற்கு அனுப்பி வைத்தது. அரசின் திட்டத்தை சேதமாக்கி அரசுக்கு இழப்பு ஏற்படுத்திய குமரி மாவட்ட வேளாண்மை துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டது.

இதைத்தொடர்ந்து குமரி மாவட்ட வேளாண்மை துறை அதிகாரிகளான முன்னாள் இணை இயக்குனர் கணேசன், தற்போதைய துணை இயக்குனர் ஸ்ரீகுமார், உதவி இயக்குனர்கள் ராஜகுமார், நிக்கோலஸ், முருகேசன் ஆகிய 5 பேர் மீதும், இதற்கு உடன்பட்ட மற்றொரு நபரான

கே.ராஜ்குமார் என்பவர் மீதும் நாகர்கோவில் லஞ்சஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இச்சம்பவம் குறித்து லஞ்சஒழிப்பு டி.எஸ்.பி., சுந்தர்ராஜன் தலைமையில், இன்ஸ்பெக்டர் ஹெக்டர் தர்மராஜ் மேற்பார்வையில் இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் வேளாண்துறை அதிகாரிகள் மட்டுமின்றி அரசு அதிகாரிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நாட்டின் சர்க்கரை உற்பத்தி2.46 கோடி டன்னாக குறையும்

புதுடில்லி:நடப்பு 2012-13ம் ஆண்டு, சந்தைப்படுத்தும் பருவத்தில் (அக்.,- செப்.,) சர்க்கரை உற்பத்தி, மதிப்பீட்டை விட, குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.காலம் கடந்த பருவமழை, வறட்சி போன்றவற்றால், மகாராஷ்டிரா, தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில், கரும்பு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் எதிரொலியாக, நாட்டின் ஒட்டுமொத்த சர்க்கரை உற்பத்தி, குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.கடந்த 2011-12ம் சந்தைப்படுத்தும் பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.60 கோடி டன்னாக இருந்தது. இது, நடப்பு 2012-13ம் சந்தைப்படுத்தும் பருவத்தில், 2.46 கோடி டன்னாக குறையும் என, கணிக்கப்பட்டுள்ளது.நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில், சென்ற அக்டோபர் முதல் நடப்பு மார்ச் 15ம் தேதி வரையிலான காலத்தில், சர்க்கரை உற்பத்தி, 2.10 கோடி டன்னாக உள்ளது என, இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தினகரன்

## நடப்பு நிதியாண்டில் வெங்காயம் உற்பத்தி 4 சதவீதம் குறையும்



புதுடெல்லி : நடப்பு நிதியாண்டில் வெங்காயம் உற்பத்தி 4 சதவீதம் குறைந்து 168.17 லட்சம் டன்னாக இருக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து, மத்திய வேளாண்துறை இணையமைச்சர் தாரிக் அன்வர் நேற்று மக்களவையில் கூறியதாவது: நடப்பு 2012,13ம் நிதியாண்டில் வெங்காயம் உற்பத்தி 4 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2011,12ம் ஆண்டில் 175.11 லட்சம் டன் வெங்காயம் உற்பத்தியான நிலையில், தற்போது 168.17 லட்சம் டன் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது மொத்தவிலைச் சந்தையில், ஒரு குவிண்டால் வெங்காயம் ரூ.936 முதல் ரூ.1,746 வரை விற்கப்படுகிறது.

வெங்காயம் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மகாராஷ்டிராவில் கடந்த ஆண்டில் 56.38 டன் உற்பத்தியானது. நடப்பு நிதியாண்டில் இது 45.46 லட்சம் டன்னாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம், கர்நாடகா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இந்த ஆண்டு உற்பத்தி அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## மணிலா விலை வீழ்ச்சி விவசாயிகள் மறியல்

திருக்கோவிலூர், : திருக்கோவிலூர் அடுத்த அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று ஆயிரத்து 200 மூட்டைகள் மணிலா பயிர் விற்பனைக்காக வந்தது. இந்த மணிலா கடந்த வாரம் இறுதியில் மூட்டை 1க்கு ரூ.5 ஆயிரம் வரை விற்பனையானது. வாரத்தின் முதல்நாளான நேற்று மூட்டை ஒன்றுக்கு ரூ.150 குறைத்து வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்திருந்தனர். இதனால் ஆவேசமடைந்த விவசாயிகள் விலை குறைப்பை கண்டித்து விற்பனை கூடம் எதிரே திருக்கோவிலூர்- விழுப்புரம் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்த

அரகண்டநல்லூர் போலீசார் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து மறியலில் ஈடுபட்ட விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி மறியலை கைவிட செய்தனர். மாவட்டத்தில் உள்ள மற்ற விற்பனை கூடத்தை விட மூட்டை 1க்கு ரூ.50 விலை அதிகமாகவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதை விவசாயிகளிடம் அதிகாரிகள் விளக்கி கூறினார்கள். இதனை ஏற்று மணிலாவை விவசாயிகள் விற்பனை செய்தனர். இந்த மறியலால் சுமார் 30நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## வறட்சி நிவாரணம் கேட்டு விவசாயிகள் சங்கம் பேரணி

தா.பேட்டை, : முசிறி யில் வறட்சி நிவாரணம் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் சங்கத்தினர் பேரணியாகச் சென்று கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமிழக விவசாய சங்கத்தின் மாவட்ட தலைவர் சின்ன துரை தலைமை வகித்தார். மாநில செயலாளர் ராஜா சிதம்பரம், மாவட்ட செய லாளர் கணேசன், கரூர் மாவட்ட தலைவர் முரு கேசன் மற்றும் விவசாயி கள் பலர் பேசினர். அப்போது விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், விவசாயிகள் பெற்ற அனைத்து வங்கி கடன்களை ரத்து செய்ய வேண்டும், பால் கொள்முதல் விலையை உயத்தவேண்டும், கால்நடைகளுக்கு மானிய விலை யில் தீவனம் வழங்கவேண் டும், விவசாய விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலையை அறி விக்க வேண் டும் உள்ளிட்ட கோரிக்கை களை விவசாயி கள் வலியுறுத்தினர். ஆர் டிஓ முஸ்தபா கமால்பாட்ஷாவிடம் கோரிக்கை மனு அளித்தனர். ஆர்ப்பாட்டத்தில் தமி ழக விவசாயிகள் சங்க பொறுப்பாளர்கள் ஜெக தீசன், அவுத்தி, தண்டபாணி மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர். முன்னதாக முசிறி பைபாஸ் ரோட்டில் இருந்து விவசாயிகள் பேரணியாக வந்தனர்.

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் கலெக்டர் தகவல்

திண்டுக்கல், : மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரண உதவி வழங்கப்படும் என கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பருவமழை பொய்த்தினால் வறட்சியால் பாதிக்கப்பட்டன. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கவும்,

வறட்சியை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கவும் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

இதில் அமைச்சர்கள் நத்தம்விசுவநாதன், முத்துசாமி, வைத்தியலிங்கம், தாமோதரன், வெங்கடாசலம் உள்ளிட்டடோர் திண்டுக்கல் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட ஆத்தூர், பலக்கனூத்து உள்ளிட்ட இடங்களைப் பார்வையிட்டனர். இதில் பாதிப்பின் தன்மை குறித்து விவசாயிகளிடம் கேட்டறியப்பட்டது. மாவட்ட நிர்வாகம் சார்பில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் விபரம், பாதிக்கப்பட்ட பயிர்களான நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், கரும்பு, பருத்தி ஆகிய பயிர்களின் சேதம் மற்றும் மதிப்பு குறித்து புகைப்படங்களுடன் தகவல் அறிக்கை தரப்பட்டது. இந்நிலையில் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரண உதவி வழங்கப்படும் என கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

## விளைச்சல் குறைவால் பழநியில் மா விலை உயர்வு

பழநி, : விளைச்சல் குறைவால் பழநி பகுதியில் மா விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

பழநி பகுதியில் 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவை. இக்கிராமங்களில் நெல், கரும்பு போன்ற பயிர் விவசாயம் மட்டுமின்றி காய்கறி மற்றும் பழவகைகயைச் சேர்ந்த தோட்டக்கலை விவசாயமும் அதிகளவில் நடந்து வருகிறது. பழநி ஆருகே ஆயக்குடி பகுதியில் அதிகளவு மா, கொய்யா மற்றும் சப்போட்டா விவசாயம் அதிகளவு நடந்து வருகிறது.

தமிழகத்தில் சேலத்திற்கு நிகராக ஆயக்குடி மாம்பழங்கள் பிரசித்தி பெற்றவை ஆகும். சுமார் 3 ஆயிரம் ஹெக்டேரில் இவ்விவசாயம் நடந்து வருகிறது. இங்கு கல்லாமை, நீலம், பங்கனவள்ளி, மல்கோவா, காளாபாடி, ஆபோஸ் வகை மாங்காய்கள் அதிகளவில் விளைவிக்கப்படுகின்றன. மே-ஜுன் மாதங்களும், டிசம்பர்-ஜனவரி மாதங்களும் சீசன் காலங்களாகும். இதுகுறித்து ஆயக்குடியைச் சேர்ந்த மா விவசாயி செல்வம் கூறியதாவது,

கடந்த வருடம் விளைச்சல் அதிகரித்திருந்ததால் விலை குறைந்திருந்தது. ஆனால், இம்முறை போதிய மழை இல்லாததாலும், மா மரத்தில் பூ விட்டிருந்த நேரத்தில் திடீர் மழை பெய்ததாலும் வரத்து குறைந்துள்ளது. இதன் காரணமாக மா விலை உயர்ந்துள்ளது. இதன் காரணமாக கடந்த வருடம் சீசன் நேரத்தில் கிலோ ரூ2.50க்கு விற்பனை செய்யப்பட்ட கல்லாமை தற்போது 5 மடங்கு உயர்ந்து ரூ.14 க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிலோ ரூ.7க்கு விற்பனை செய்யப்பட்ட

செந்தூரா தற்போது ரூ.25க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிலோ ரூ.8க்கு விற்பனை செய்யப்பட்ட பங்கனவள்ளி தற்போது ரூ.40க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிலோ ரூ.18க்கு விற்பனை செய்யப்பட்ட கிரேப் தற்போது ரூ.25க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிலோ ரூ.18க்கு விற்பனை செய்யப்பட்ட ஆபேஸ் தற்போது ரூ.40க்கு விற்பனை செய்யப்படுகிறது. விளைச்சல் குறைவினால் இதுபோன்ற விலை உயர்வு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிறது. இப்பகுதியில் பழங்களை பதப்படுத்தும் குளிர்பதன கிட்டங்கி மற்றும் ஜுஸ் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று பலமுறை கோரிக்கை விடுத்து வருகிறோம். தேர்தல் வாக்குறுதிகளின்போது தலை அசைக்கும் அரசியல்வாதிகள், பின் இதுபற்றி நினைத்துக்கூட பார்ப்பதில்லை. இதனால் பழங்களின் விலை ஸ்தரமின்றி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## காளான் வளர்ப்பு இலவசப் பயிற்சி

திண்டுக்கல், : திண்டுக்கல் கனராவங்கியின் ஊரக சுயவேலைவாய்ப்புப் பயிற்சி நிலையத்தில் வரும் 21ம் தேதி காளான் வளர்ப்பு பயிற்சி நடைபெற உள்ளது. இதற்கு குறைந்தபட்சம் 8ம் வகுப்பு படித்திருக்கவேண்டும். வயது 18 முதல் 45க்குள் இருக்க வேண்டும். பயிற்சிக்கு கட்டணம் எதுவும் இல்லை. பயிற்சி காலத்தில் உணவு இலவசமாக வழங்கப்படும். பயிற்சி முடிந்ததும் சான்றிதழ் அளிக்கப்படும். விருப்பம் உடையவர்கள் கனராவங்கி ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையம் 83ஏ, முதல்மாடி, ஜான்பால் வளாகம், டிஎம்எஸ்எஸ்.கட்டடம், நேருஜிநகர், திண்டுக்கல்-624 001 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.விண்ணப்பத்துடன் ரேஷன்கார்டு நகல், கல்விச்சான்றிதழ் நகல், இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவைக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு 7418345528 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளலாம் என்று இயக்குநர் நாகேஷ் தெரிவித்துள்ளார்.

## காலநிலை மாற்றத்தால் நோய் தாக்கிய பயிர்களை காக்கும் வழிமுறைகள்

காரைக்குடி, : காலநிலை மாற்றங்களால் பயிர்களை நோய், பூச்சிகள் தாக்குதலில் இருந்து காக்கும் முறைகள் குறித்து செட்டிநாடு மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். காரைக்குடி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடும் வெயிலும், சில நேரங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் அதிக ஈரப்பதம்,

மேகமூட்டம் ஏற்படுவதால் காற்றின் மூலம் பரவும் இரண்டாம் நிலை பூஞ்சாணங்கள் பயிரை தாக்கும் அபாயம் உள்ளது.

இதனால் கதிர் பிடித்த நெல் மணிகளில் சிவப்பு, மஞ்சள் அல்லது இளஞ்சிவப்பு புள்ளிகளுடன் கதிர்மணிகள் தென்படுகின்றன. மேலும் பூக்கும் தருணத்திலிருந்து பால்பிடிக்கும் தருணத்தில் உள்ள நெற்பயிர்களில் நெற்பழ நோய் வர வாய்ப்புள்ளது.

இதனை கட்டுப்படுத்த செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளதாவது: கதிர் அறுக்கும் தருவாயில் இருந்தால் நெல்மணிகளை நன்றாக காயவைக்க வேண்டும். பால் பிடிக்கும் பருவத்தில் இருக்கும் நெற்கதிர்களுக்கு புரோப்பிக்னோசல் ஒரு கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

காற்றின் மூலம் பரவும் முன்பருவ மற்றும் பின் பருவ இலைப் புள்ளி மற்றும் துரு நோய் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே குளோரோதலானில் அல்லது மாங்கோசெப் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

நவீனம் என்ற பெயரில் விவசாயிகள் இயற்கையை விட்டு விலகிச் செல்கின்றனர் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேச்சு

வேதாரண்யம், : நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த ஆய்ககாரன்புலம் ஆர்.வி.எஸ் பாரத் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி ஆண்டு விழா வலிவலம் தேசிகர் மேல்நிலைப்பள்ளி ஆசிரி யர் மாரியப்பன் தலைமை யில் நடைபெற்றது. பள்ளி தாளாளர் சுவாமிநாதன் வரவேற்றார். ஆசிரியர் மாதவன் ஆண்டறிக்கை வாசித்தார்.

பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் பாலு, ஓய்வுபெற்ற கிராம நிர்வாக அலு வலர் ராதாகிருஷ்ணன், குருகுலம் ஆசிரியர் பயிற்சி பள்ளி விரிவுரையாளர் செல்வராசு முன்னிலை வகித்தனர். விழாவில் கலந்து கொண்ட இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசும்போது, நவீன விவசாயம் என்ற பெயரில் இயற்கையை விட்டு விலகிச் செல்கிறோம். திராட்சை போன்ற நேரடி யாக உண்ணும் பழங்கள் உள்பட உணவு பொருட்கள் அனைத்தும் ரசாயன மருந்துகள் சேர்ப்பதால் விஷமாக மாறி வருகிறது. இதனால் நோய், நொடிகள் அதிகரிக்கிறது. மருந்துக்கும், மருத்துவருக்கும் கொடுக்கும் செலவீனமும் அதிகரிக்கிறது. அவுரிச்செடி போன்ற மூலிகைகளை பயன்படுத்திய காலத்தில் நோய் தாக்கம் குறைவாக இருந்தது. இப்போது அது அதிகரித்து உள்ளது. அண்மைக் காலமாக பயமுறுத்தி வரும் டெங்கு காய்ச்சலுக்கு நிலவேம்பு, பப்பாளி கசாயம் அருந்த அரசாங்கமே வலியுறுத்தியது. இதன் மூலம் இயற்கையின் அவசியத்தை நாம் மெல்ல மெல்ல உணர்ந்து வருகிறோம். பஞ்ச பூதங்களால் உருவாக்கப்பட்ட உலகில் இயற்கை

சக்தி அழிந்து வருவதால் சூழல் கேடுகள், பருவ நிலை மாற்றங்கள் நிகழ்கிறது. மீண்டும் நாம் காடு வளர்க்க வேண்டும். அதை சார்ந்து மீன், கால்நடைகள் போன்ற இயற்கை வளர்ப்பில் ஆர் வம் செலுத்த வேண்டும். இதன் மூலம் கிராமங்கள் வாழும் கிராமங்களாக மாறும்

என்றார். ஜெயராமன், ஆசிரியர்கள் நெடுமாறன், சண்முகசுந்தரம், பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளர் மோகன் குமாரமங்கலம் கலந்து கொண்டனர்.

தலைமையாசிரியை லதா நன்றி கூறினார்.

## விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தேனி, : வறட்சி நிவாரணம் மற்றும் விவசாய கடன் ரத்து செய்ய வலியுறுத்தி விவசாயிகள் சங்கம் சார்பில் தேனியில் ஆர்ப்பாட்டம் நடந்தது. விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் பாண்டியன் தலைமை வகித்தார். செயலாளர் பிரபாகரன், மாவட்ட வாழை உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் நாராயணசாமி, அல்லிநகரம் விவசாயிகள் பாதுகாப்பு சங்க தலைவர் கோவிந்தசாமி, லட்சுமிபுரம் விவசாயிகள் நலச் சங்க பொருளாளர் பரசுராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பருவமழை பொய்த்தால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணம் மற்றும் விவசாய கடனை ரத்து செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர்.

## திருந்திய நெல்சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி

திருவள்ளூர், : திருவள்ளூர் ஒன்றியம் மேலானூரில் வேளாண்மை துறையின் அக்மார்க் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பண்ணை பயிற்சி, வயல்வெளி விழா, காரிப் முன்பருவ இயக்க கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் எபிநேசன் தலைமை வகித்தார். அக்மார்க் திட்ட தலைவர் சுதாகர் முன்னிலை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராயப்பன் வரவேற்றார்.

திருவள்ளூர், நெல் ஆராய்ச்சி மைய பேராசிரியர்கள் முரளிதரன், மணிமாறன் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். திருந்திய நெல்சாகுபடி, இயந்திரத்தின் மூலம் களை எடுப்பது, அறுவடை குறித்த தொழில்நுட்பம் பற்றி விளக்கினர்.

திருந்திய நெல்சாகுபடி செய்து செயல்விளக்கம் அளிப்பதற்காக 24 விவசாயிகளுக்கு தலா ரூ.4 ஆயிரத்துக்கான காசோலை வழங்கப்பட்டது. மேலும் கறவை மாடு, கோழி வளர்ப்பு திட்டங்களை செயல்படுத்திய விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப வல்லுநர் பாஸ்கர் நன்றி கூறினார்.

## கோடை காலத்தில் பண்ணை பராமரிப்பு முறை அவசியம்

நாமக்கல், : நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வரும் 3 நாட்களுக்கான வானிலை அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் வரும் 3 நாட்களும் வானம் தெளிவாக காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 3 கி.மீ. வேகத்தில் தென்கிழக்கில் இருந்துவீசும். வெப்பநிலை அதிகபட்சம் 96 டிகிரி. குறைந்த பட்சம் 69 டிகிரி. காற்றின் ஈரப்பதம் அதிக அளவு 70 சதவீதம். குறைந்த அளவு 19 சதவீதமாக காணப்படும். பகல் வெப்பம் தொடர்ந்து அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால் கோடைக்கால பண்ணை பராமரிப்பு முறைகளை செயல்படுத்துவது கோழிகளிடையே வெப்ப அயற்சியை குறைக்கும். சற்று கூடுதலான புரதசத்து மற்றும் அமினோ அமிலங்களை சேர்ப்பது முட்டை உற்பத்தியை தக்கவைக்கும். குடிநீர் குழாய்களில் தண்ணீரை அவ்வப்போது வெளியேற்று வதன் மூலம் குடிநீரின் வெப்ப நிலையை அதிகரிக்காமல் தடுக்கலாம். தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பயிர்ககள் முதிர்வடையும் தருணத்தில் இருப்பதாலும், அறுவடை தருணத்தை நெருங்குவதாலும் தற்போது நிலவும் 37 சென்டிகிரேட் அளவு வெப்பநிலையில் வாரம் ஒரு முறை நீர்பாசனம் செய்வது அவசியம். இதன் மூலம் காய்கள் நன்கு திறட்சி அடையும். அறுவடை எளிதாக இருக்கும். இவ்வாறு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகள் கவலை நீரின்றி காயும் மலைகாய்கறிகள்

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் வழக்கத்துக்கு மாறாக, இந்தாண்டு துவக்கத்திலேயே உறைபனி, வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. மேலும் கடும் வறட்சியும் ஏற்பட்டுள்ளது. அதனால் தேயிலைக்கு அடுத்தப்படியாக மிகுதியாக சாகுபடி செய்யப்படும் மலைதோட்ட காய்கறிகள் விளைச்சல் வீழ்ச்சி கண்டுள்ளது. வரத்து குறைவால், காய்கறிகள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

தற்போது பயிரிடப்பட்டுள்ள பீன்ஸ், மூட்டைக்கோஸ், மேராக்காய் உள்ளிட்ட காய்கறிகள் போதிய நீரின்றி காய்ந்து வருகின்றன. இதனை காப்பாற்ற சில விவசாயிகள், தங்கள் தோட்டங் களில் ஸ்பிரிங்லர் பைப் மூலம் நீர்பாய்ச்சி
வருகின்றனர். மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் விருப்பு, வெறுப்பு இல்லாமல் நடவடிக்கை எடுக்க கோரிக்கை

நெல்லை, : விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் விருப்பு, வெறுப்பு இல்லாமல் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண் டும் என தமிழ்நாடு சேவை பாரதி தொண்டு நிறுவன அமைப்பாளர் கணேசன் கலெக்டரிடம் மனு கொடுத் தார். அதில் கூறியிருப்பதாவது: விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் விவ சாயம் மற்றும் விவசாயம் சாராத மனுக்கள் பாகுபாடின்றி படிக்கப்பட்டது. முந்தைய கூட்டத்தில் கொடுக்கப்பட்ட அத்தனை மனுக்களும் படிக்க வைத்து விவாதம் நடத்தி தீர்வு காணப்பட்டது.

தற்போது விருப்பமுள்ள மனுக்களை விவசா யம் சார்ந்ததும், வெறுப்புள்ள மனுக்களை விவசா யம் சாராத மனுக்களிலும் பதிவு செய்கின்றனர். இத னால் விருப்பமுள்ளவர்களின் விவசாய மனுக்கள் மட்டும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் படிக்கப்பட்டு விவாதம் நடக்கிறது.

மற்ற மனுக்கள் புறக்
கணிக்கப்படுகிறது. பாதி மனுக்களுக்கு தீர்வும் மீதி மனுக்களுக்கு ஏமாற்றமும் கிடைக்கிறது.
எனவே அனைத்து மனுக்களுக்கும் வாதம், விவாதம் நடத்தி தீர்வுகாண வேண்டும்.
இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தென் பெண்ணை–பாலாறு இணைப்பு திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

வேலூர்

தென்பெண்ணை–பாலாறு இணைப்பு திட்டத்தை விரைந்து செயல்படுத்திட வேண்டும் என்கிற கோரிக்கையை வலியுறுத்தி விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## ஆர்ப்பாட்டம்

தமிழக விவசாயிகள் சங்கத்தின் வேலூர் மாவட்ட செயலாளர் தனபால் தலைமையில் நேற்று விவசாயிகள் வேலூர் கலெக்டர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்தை மாவட்ட தலைவர் கண்ணைய நாயுடு தொடங்கி வைத்தார்.

அவர்கள் கோரிக்கை பற்றிய விவரம் வருமாறு:–

தமிழ்நாட்டில் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் வேலூர் மாவட்டமாகும். பல ஆண்டுகளாக பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தால் நிலத்தடி நீர் மட்டம் சுமார் 700 அடிக்கு கீழே போய்விட்டது. பாலாறும் வறண்டு விட்டது.

எனவே நிலத்தடி நீர் மட்டம் உயரவும், விவசாயத்தையும், விவசாயிகளையும் பாதுகாக்கவும் தென்பெண்ணை ஆற்று நீரை கிருஷ்ணகிரி அணையில் இருந்து செட்டேரி அணை வழியாக (கல்லாற்று வழி) பாலாற்றில் இணைக்க அரசை சங்கம் கேட்டுக்கொள்கிறது. இந்த திட்டத்தை விரைந்து செயல்படுத்திட அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்திட வேண்டும். இந்த திட்டம் நிறைவு பெறும் போது காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டமும் பயன் பெறும்.

## தள்ளுபடி செய்ய வேண்டும்

வேலூர் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல ஆண்டுகள் மழைபெய்யாத காரணத்தால், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது தெரிந்ததே. எனவே தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகள் உள்ளிட்ட அனைத்து நிதி அமைப்புகளிலும் விவசாயிகள் பெற்ற அனைத்துவகையான கடன்களையும் அரசு தள்ளுபடி செய்திட வேண்டும்.

ஜப்தி என்ற பெயரில் விவசாயிகளிடம் பறித்துச்சென்ற டிராக்டர் மற்றும் பொருட்களை மீண்டும் விவசாயிகளிடமே வழங்கிட வேண்டும்.

விவசாயிகள் விளைவித்த கரும்புக்கான வெட்டுக்கூலியை ஆலையே ஏற்றுக்கொள்வதுடன், டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்கிட வேண்டும். அத்துடன் மற்ற பயிர்களுக்கு பாதிப்பின் அடிப்படையில் வறட்சி நிவாரணம் வழங்கிட வேண்டும், என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது அவர்கள் கோஷமும் போட்டனர்.

கோரிக்கையில் முக்கியத்துவம் குறித்து கிருஷ்ணன், ராமச்சந்திரன் மற்றும் நிர்வாகிகளான நீதி, தனசேகரி, வர்ணகுமார் உள்பட பலரும் பேசினார்கள்.

பின்னர் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் கலெக்டர் அலுவலகம் சென்று கலெக்டரை சந்தித்துகோரிக்கைகள் அடங்கிய மனுவை கொடுத்துவிட்டு கலைந்து சென்றனர்.

## நீலகிரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடக்கம் கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தகவல்

ஊட்டி,

நீலகிரி மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட உள்ளதாக கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தெரிவித்து உள்ளார்.

32 மாவட்டங்கள்

இது குறித்து கலெக்டர் விடுத்து உள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:

தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் உள்ள அனைத்து கிராமங்களில் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் அடுத்த மாதம் 7ந் தேதிக்குள் 4வது சுற்று தடுப்பூசி 88 லட்சம் பசுவினம் மற்றும் எருமை யினங்களுக்கு போடப் பட உள்ளது. மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் தடுப்பூசி பணி மேற்கொள்ளப் படும் குறிப்பிட்ட நாளில், இத்தடுப்பூசி

பணிக்கென பிரத்யேகமாக ஏற்படுத்தப் பட்டுள்ள தடுப்பூசி குழுவினர் மூலம் பசுவினம் மற்றும் எருமையினங்களை கணக்கிட்டு தடுப்பூசி போடப் பட உள்ளது.

கிராம சபை கூட்டம்

மேலும் இது தொடர்பாக கிராமப்புற விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து கிராமங்களிலும் சிறப்பு கிராம சபை கூட்டம் தடுப்பூசி பணி மேற்கொள்ளும் முன்னர் நடைபெற உள்ளது. அக்கிராம சபை கூட்டத்தில் கிராம மக்கள் அனைவரும் பங்கேற்று கால்நடை டாக்டர்கள் கூறும் அறிவுரைப்படி கால்நடை களை அவர்களால் குறிப்பிடப் படும் தேதியில், குறிப்பிட்ட இடங்களுக்கு அழைத்து சென்று தடுப்பூசி போட்டு கொள்ள கேட்டு கொள்ளப் படுகிறது.

கால் மற்றும் வாய் கோமாரி நோயானது குறிப்பாக கலப் பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்து கிறது. இந்நோயினால் இறப்புகள் குறைவாக இருந்த போதிலும், கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு, எருதுகளின் வேலைத்திறன், கறவை மாடுகளில் சினை பிடிப்பு தடைபடுவது, இளங்கன்றுகளின் இறப்பு போன்ற பாதிப்புகள் ஏற்ப டுகிறது.

உமிழ்நீர், சாணம்

மேலும் இந்நோய் பொதுவாக குளிர் மற்றும் பனி காலம், நோய் பாதிக்கப் பட்ட இடங்களில் இருந்து வாங்கி வரப்பட்ட கால்நடை கள், சுகாதாரமற்ற கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடை களுக்கு தடுப்பூசி போடாமல் இருத்தல் ஆகிய காரணங் களால் இந்நோய் விரைவாக காற்றின் மூலம் பரவுகிறது. மேலும் இந்நோய் பாதிக்கப் பட்ட மாடுகளின் சிறுநீர், உமிழ்நீர், சாணம் ஆகிய வற்றால் மற்ற கால்நடை களுக்கு பரவுகிறது.

எனவே நீலகிரி மாவட்டத் தில் உள்ள விவசாய பெருமக் கள் தங்களது பசுக்கள், எருதுகள், எருமைகள் மற்றும் 4 மாதத்திற்கு மேற்பட்ட இளங்கன்றுகளுக்கு வருகிற ஏப்ரல் மாதம் 7ந் தேதிக்குள் ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிட்ட நாளில், குறிப் பிட்ட இடத்தில் தங்களது கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி தவறாது போட்டு கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## மகசூல் குறைந்ததால் பச்சை தேயிலை விலை உயர்வு

குன்னூர்,

வறட்சி காரணமாக பச்சை தேயிலை மகசூல் குறைந்ததால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

பருவமழை

நீலகிரி மாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை இரு பருவ மழைகளும் பெய்து வருகிறது. தென் மேற்கு பருவ மழை கூடலூர் மற்றும் ஊட்டி பகுதிகளில் அதிகளவு பெய்து குடிநீர் தேவை மற்றும் விவசாய தேவைகளுக்காக பயன்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த 2012ம் ஆண்டு தென் மேற்கு பருவமழையும், வடகிழக்கு பருவமழையும் பொய்த்து போன காரணத்தால் மாவட் டத்தில் வறட்சி நிலவி வரு கிறது. இதனால் தேயிலை மற்றும் விவசாய பயிர்களின் மகசூல் குறைவடைந்துள் ளது.

மகசூல்

மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடு பட்டு வருகிறார்கள். வறட்சி யின் காரணமாக தேயிலை மகசூல் பாதிக்கப் பட்டு உள் ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையும் விவசாயிகளுக்கு கைகொடுக்க வில்லை. தற்போது குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கடும் வெயில் நிலவுவதோடு, வறட்சியும் தலை தூக்கி உள்ளது. பருவமழை பொய்த்து போனதாலும், வறட்சி யினாலும் தேயிலை மகசூல் அதிகளவு பாதிக்கப்பட்டு உள்ளது.

இதனால் தேயிலை தூள் உற்பத்தியும் குறைவடைந்து ஏல மையத்திற்கு வாரா, வாரம் வரத்து குறைவடைந்து கொண்டே வருகிறது. இதனால் தேயிலை தூளின் விலை உயர்ந்து வருகிறது.இதன் எதிரொலியாக பச்சை தேயிலைக்கும் விலை உயர்வு ஏற்பட்டு வருகிறது. கடந்த 16ந் தேதி சனிக்கிழமை பச்சை தேயிலையின் வார விலையாக ஏ பிரிவிற்கு ரூ.25ம், பி பிரிவுக்கு ரூ.23 மற்றும் ரூ.24 என்றும், சி பிரிவுக்கு ரூ.19 மற்றும் ரூ.20 என்றும் வழங்கப்பட்டது.பச்சை தேயிலை மகசூல் குறைவின் காரணமாக இந்த விலை உயர்வு ஏற்பட்டு உள்ளதாக சிறு விவசாயிகள் கூறுகின்றனர். இந்த விலை உயர்வை தொடர்ந்து தக்க வைத்து கொள்ள வேண்டு மானால் மத்திய அரசு தேயிலை ஏற்றுமதிக்கும், உள்நாட்டு விற்பனைக்கும் ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தி தர வேண்டும் என்று சிறு விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்க மானியத் தொகை கலெக்டர் சி.நடராசன் தகவல்

திருவாரூர்,

திருவாரூர் மாவட்டத்தில் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்க மானியத் தொகை வழங்கப்படும் என்று, கலெக்டர் சி.நடராசன் கூறியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

மானியத்தொகை

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்யாததால் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு "தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி" திட்டத்தின் கீழ் ரூ.181 கோடியில் 15,000 பண்ணை குட்டைகள் அமைக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் பண்ணைக் குட்டைகளில் மீன்வளத்துறை மூலம் மீன் வளர்க்க ஒரு ஆண்டுக்கு தேவையான இடுபொருட்கள் (மீன் குஞ்சு, உணவு, உரம்) மானியத் தொகையை கீழ்கண்டவாறு வழங்க தமிழக அரசால் ரூ.12.85 கோடி மதிப்பில் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

31–ந் தேதிக்குள்

எனவே, இத்திட்டத்தின் மூலம் பயனடைய விரும்பும் திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை மூலம் தேர்வுசெய்யப்பட்ட பண்ணை குட்டை விவசாயிகள் தங்கள் விண்ணப்பங்களை தங்களது விவசாய நில விவரங்களுடன் மாவட்ட ஆட்சியர், திருவாரூர் மாவட்டம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வருகிற 31–ந் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விவசாய பணிக்கு கதிர் அறுக்கும் இயந்திரத்தை தாமதமின்றி அனுப்ப வேண்டும் விவசாயிகள் சங்க கூட்டத்தில் கோரிக்கை

கீரனூர்

விவசாய பணிக்கு பொறி யியல் துறையில் உள்ள கதிர் அறுக்கும் இயந்திரம் உள்ளிட்டவற்றை விவ சாயிகளுக்கு தாமத மின்றி அனுப்ப வேண் டும் என்று கோரிக்கை விடுத்து விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர் மானம் நிறைவேற்றப் பட்டது.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

குன்னண்டார்கோவில் வட்டார கட்சி சார்பற்ற விவசாயிகள் மேம்பாட்டு சங்க கூட்டம், கீரனூரில் நடந்தது. கூட்டத்தில் சங்கத் தின் மாவட்ட தலைவர் சிவசாமி, துணை தலைவர் சத்தியநாதன், மாவட்ட பிரதிநிதி சைவராசு, இளைஞர் அணி தலைவர் ராமமூர்த்தி, நகர தலைவர் கோவிந்தராஜ், ஒன்றிய தலைவர் ஆறுமுகம், செயலாளர் நடராஜன், துணை தலைவர் சேகர் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வரு மாறு:

**வறட்சி நிவாரணம்**

புதுக்கோட்டை மாவட்டத் திற்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று முதல் அமைச்சரை கேட்டுக் கொள்வது. 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில்அந்தந்த பகுதியில் உள்ள வேலை யாட்களை, அப்பகுதியில் உள்ள விவசாய பணிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்வது. விவசாய பணிக்கு பொறியியல் துறை யில் உள்ள கதிர் அறுக்கும் இயந்திரம், டிராக்டர், உழவு கருவிகளை விவசாயிகளுக்கு தாமதமின்றி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்வது. கீரனூரில் பஸ் டெப்போ அமைத்து, கூடுதல் பஸ்கள் வழங்க வேண்டும். பழுதடைந்துள்ள பஸ்களை உடனடியாக சரி செய்ய வேண்டும். மேற்கண்ட தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட் டன.